**சுருக்கம்**

தொழில் துறை – தமிழ்நாடு கனிம நிறுவனம்– தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் குவாரிகள் மற்றும் சுரங்கங்களில் விரிவாக்கம் மற்றும் உற்பத்தி பணிகளுக்கான இயந்திரங்களை நவீனப்படுத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தொழில் (எம்எம்இ.1)துறை**

**அரசாணை (டி) எண்:109** **நாள்:28.07.2014**
**ஜய, ஆடி 12,**
**திருவள்ளுவர் ஆண்டு –2045**

**ஆணை:**

24.07.2014 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட தொழில் வளர்ச்சித் திட்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்:-

> “தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் குவாரிகள் மற்றும் சுரங்கங்களில் விரிவாக்கம் மற்றும் உற்பத்தி பணிகளுக்காக பளு தூக்கி இயந்திரங்கள் சுரங்க லாரிகள், அதாவது டிப்பர்கள் துளையிடும் இயந்திரங்கள், மண் வாரி இயந்திரங்கள் மற்றும் காற்றழுத்தி இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த இயந்திரங்கள் நவீன முறையில் பெரிய பாறைகளிலிருந்து கற்துண்டுகளை வெட்டியெடுப்பதற்கும் அவற்றை கையாளுவதற்கும் கிரானைட் கழிவுகளை கையாளுவதற்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது வாடகை இயந்திரங்களுக்கு செலவிடப்படும் தொகையினை குறைக்கும் வகையிலும், பழுது நீக்கும் நேரத்தை குறைக்கும் வகையிலும் புதிய இயந்திரங்களை வாங்கி, சுரங்கம் மற்றும் குவாரிகளில் பயன்படுத்தி உற்பத்தித்திறனை அதிகரிக்கும் வண்ணமும் விஞ்ஞான முறையில் மிக சிறப்பாக சுரங்கப்பணிகளை மேற்கொள்ளும் வகையிலும், 16 கோடியே 42 இலட்சம் ரூபாய் செலவில் சொந்தமாக நவீன இயந்திரங்களான 11 மண் வாரி இயந்திரங்கள், 10 சுரங்க லாரிகள் அதாவது டிப்பர்கள், 5 மற்றும் 6 காற்றழுத்தி இயந்திரங்கள் ஆகியவை தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கென வாங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.”

2. மேற்கண்ட திட்டத்தினை தமிழ்நாடு கனிம நிறுவன நிதியிலிருந்தே குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப்படுத்தவும் மற்றும் இத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்து மாதந்தோறும் அரசிற்கு அறிக்கை அனுப்புமாறும் தமிழ்நாடு கனிம நிறுவனத்தை அரசு பணிக்கிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ச. வி. சங்கர்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு கனிம நிறுவனம்
சேப்பாக்கம், சென்னை –5
நகல்
தொழில் (வ.செ.தி.) துறை, சென்னை – 9
சிறப்புத் திட்டங்கள் மற்றும்
அமலாக்கத் துறை,சென்னை – 9
தொழில் (அ.ந.மு.2) துறை,சென்னை –9
கோப்பு நகல்/உதிரி நகல்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 28/7/2014